# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு மே மாதம் 26–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு, பராபவ ஆண்டு, வைகாசி மாதம் 12ம் நாள்**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 388/2025**

**(CNR.No. TNNM-14-001494-2025)**

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

சேந்தமங்கலம் காவல் நிலையம் – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண்.173/2024)

எதிர்

செந்தில், த/பெ. சின்னுசாமி.

காட்டுக்கொட்டாய், கலைச்செல்வி தோட்டம்,

துத்திக்குளம் அஞ்சல்,

சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல். – எதிரி

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

| | | |
|---|---|---|
| 1. | சம்பவ நாள் | 09.08.2024 |
| 2. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | 25.11.2025 |
| 3. | எதிரி கைது செய்யப்பட்டு | கைது \| பிணையில் \| BNSS பிரிவு 35(3) |

<table>
<tr><td></td><td>பிணையில் சென்ற நாள்</td><td><table><tr><td>செய்யப்பட்ட நாள்</td><td>சென்ற நாள்</td><td>ன் கீழ் அறிவிப்பு</td></tr><tr><td>–</td><td>–</td><td>05.08.2024</td></tr></table></td></tr>
<tr><td>4.</td><td>குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) of BNS –ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனை–யப்பபட்டன.</td></tr>
<tr><td>5.</td><td>BNSS பிரிவு 263(2) ன் கீழான கேள்வி</td><td>02.03.2026</td></tr>
<tr><td>6.</td><td>எதிரியின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் விசாரணை தொடங்கிய நாள்</td><td>21.05.2026</td></tr>
<tr><td>8.</td><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table><tr><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>சாட்சிகளின் பெயர்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr><tr><td>அ.சா.1</td><td>பூபதி</td><td>20.06.2026</td><td>20.06.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>லட்சுமி</td><td>20.06.2026</td><td>20.06.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>திருநாவுக்கரசு</td><td>22.05.2026</td><td>22.05.2026</td></tr></table></td></tr>
<tr><td>9.</td><td>வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள்</td><td>22.05.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 10. | BNSS பிரிவு 351(1)(ஆ) ன் கீழான கேள்வி | 25.05.2026 |
| 11. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | 26.05.2026 |
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) of BNS ன் கீழான குற்றச்-சாட்டுகளிலிருந்து எதிரியை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்ட நாள் | – |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

******

இந்த வழக்கானது 25.11.2025–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் திருமதி. உதயாபானு., அரசு உத–வி வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. P. பாலகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகி–யும், 25.05.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசார–ணைக்கு வந்த போது , இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்–

கின் சாட்சி மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்–நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

**1)** அரசு தரப்பு வழக்கு யாதெனில், இவ்வழக்கின் வாதி பூபதி என்பவர் காட்டுக்கொட்டாய் கலைச்செல்வி தோட்டம் துத்திக்குளத்தில் தனது பெற்றோருடன் வசித்து வருவதாகவும், வாதியின் அம்மா லட்சுமிக்கும் அப்பா செந்திலுக்கும் குடும்ப பிரச்சனை காரணமாக அடிக்கடி சண்டை செய்து கொள்வார்கள் என்றும் வாதியின் அம்மா லட்சுமி பெயரில் 2 1/4 சென்ட் வீட்டு நிலம் காளப்பநாயக்கன்பட்டி புதூர் உடையார் தெருவில் இருப்பதை வாதியின் அப்பா தனது பெயருக்கு மாற்றி கொடு என்று பிரச்சனை செய்து வந்த நிலையில் 09.08.2024ம் தேதி இரவு 07.30 மணிக்கு எதிரி செந்தில் குடிபோதையில் சாட்சி2 லட்சுமியை வீட்டு நிலத்தை என் பெயரில் எழுதி தரமாட்டாயா கண்டார ஓழி தேவடியா நாதேரி முண்ட என்று தகாத கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், மேற்படி அதே தேதி அதே நேரம் அதே இடத்தில் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக இவ்வழக்கின் வாதி பூபதியை POCO செல்போன் சார்ஜ் போட்டு இருந்ததை எடுத்து வந்து சாட்சி2 லட்சுமியிடம் தலைவாசலில் உள்ள சம்பந்திக்கு போன் போட்டு கொடு என்று கொடுத்த போது வாதியானவர் வாங்க மறுத்ததால் செல்போனை கீழே போட்டு உடைத்து சேதப்படுத்தியதாகவும், மேற்படி அதே தேதி அதே நேரம் அதே இடத்தில் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக வாதி பூபதி எதிரியிடம் என் செல்போனை கீழே போட்டு ஏன் உடைச்சீங்க என்று கேட்டதற்கு எதிரி செந்தில் மாட்டுக்கொட்டாயில் வைத்திருந்த கடப்பார கம்பியை எடுத்து வந்து செல்போனை நீ சம்பாரிச்சு வாங்கினயாடா என்றும் என்னை எதிர்த்து கேள்வி கேக்கிறாயா என்று கையில் வைத்திருந்த கடப்பாரை கம்பியால் வாதியின் வலது பக்க தலை மற்றும் இடது கை மணிகட்டு

அருகே சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி அதே தேதி அதே நேரம் அதே இடத்தில் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக இவ்வழக்கின் எதிரி செந்தில் வாதி பூபதியை பார்த்து கையில் வைத்திருந்த கடப்பார கம்பியை காட்டி நீ எங்கேயாவது ஓடி போயிடு மீண்டும் வீட்டிற்கு வந்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், நிகழ் நிலை புகார் தாரரான பூபதி கொடுத்த புகாரின் பேரில் சேந்தமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 173/2024 ல் எதிரி மீது பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) of BNS –ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை முடிக்கப்பட்டு எதிரி மீது பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) of BNS ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களின் பரிசீலனை செய்ததில் எதிரி மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 388/2025 ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பானையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும், BNSS 230–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

3) வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரி படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், BNSS 193–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது சொல்லப் பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், எதிரி மீது சட்டப்பிரிவுகள்

296(b), 324(2), 118(1), 351(3) of BNS ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் வினவிய போது, எதிரி குற்றச் சாட்டுகளை மறுத்து, குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.9** வரையிலான சான்றாவ–ணங்களும், **அ.சா.பொ.1** மற்றும் **அ.சா.பொ.2** சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டன.

**<u>5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>**

**5.1. அ.சா.1 பூபதி தனது சாட்சியத்தில்**, ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவர் தனது அப்பா என்றும், வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த ஆவணத்தில் உள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகவும், சமரச மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2. அ.சா.2 லட்சுமி தனது சாட்சியத்தில்,** ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவர் தனது கணவர் என்றும், வழக்கைப் பற்றி

எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5.3. அ.சா.3 திருநாவுக்கரசு தனது சாட்சியத்தில்,** கடந்த 09.08.2024ம் தேதி 19.10 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன்ராம் என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது சேந்தமங்கலம் அரசு மருத்துவமைனையில் இருந்து கிடைக்கப்பெற்ற பூபதி என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வாதி பூபதியை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய கு.எண்.173/2024, BNS பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா கடந்த 10.08.2024ம் தேதி பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தனபால், பெருமாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட 92 செ.மீ. நீளமுள்ள கடப்பாரை கம்பி மற்றும் உடைந்த நிலையில் இருந்த POCO செல்போன் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91ன் மூலம் கனம்

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் பூபதி, லட்சுமி, பிரியா, பெருமாள், தனபால் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் கடந்த 18.08.2024ம் தேதி காவல்நிலையத்தில் ஆஜராகும்படி எதிரிக்கு BNSS சட்டபிரிவு 35ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு மேற்படி அறிவிப்பின் பேரில் எதிரி செந்தில் நிலையத்தில் ஆஜரானதால் அவர்கைது செய்யப்படவில்லை என்றும், 09.10.2024ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. சங்கீதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றதாகவும், பின்பு இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன்ராமை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது BNS பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 ன் மூலம் புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ,சா.ஆ.7 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகவும், 92 செ.மீ. நீளமுள்ள கடப்பாரை கம்பி அ.சா.பொ.1 ஆகவும், உடைந்த நிலையில் உள்ள POCO செல்போன் அ.சா.பொ.2 ஆகவும், விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.,சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**6)** இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரியிடம் BNSS 351(1) (ஆ)–ன் படி எடுத்துரைக்க, எதிரி பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில்

விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

8) அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், வாதி தொடுத்த பொய்யான புகாரின் மீது சரியான புலன் விசாரணை செய்யாமல் போலீசார் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கு சந்தேகத்துடன் அமைந்துள்ளது என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

10.1. இந்த வழக்கின் நிகழ்நிலை புகார் தாரரான பூபதி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணையில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவர் தனது அப்பா என்றும், வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை

விசாரிக்கவில்லை என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த ஆவணத்தில் உள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும் கூறியதால் அ.சா.1 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது அ.சா.1 எதிரியும் தானும் சமாதானமாக சென்று விட்டோம் என்றும், சமரச மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் மேற்படி சமரச மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டதாக கூறியுள்ள போதிலும், அ.சா.1 யிடமிருந்து எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதையும் வெளிக்கொணரவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10.2.** அரசு தரப்பில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள பூபதி தனது முதல் விசாரணையில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவர் தனது கணவர் என்றும், வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், கூறியதால் அ.சா.2 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது அ.சா.2 எதிரியும் தானும் சமாதானமாக சென்று விட்டோம் என்றும், சமரச மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் மேற்படி சமரச மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.2 எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டதாக கூறியுள்ள போதிலும், அ.சா.2 யிடமிருந்து எதிரி மீதான குற்றச் சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதையும் வெளிக் கொணரவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10.3.** அரசு தரப்பில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் ஆன திருநாவுக்கரசு, கடந்த 09.08.2024ம் தேதி 19.10 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன்ராம் என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது சேந்தமங்கலம் அரசு மருத்துவமைமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற பூபதி என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வாதி பூபதியை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய கு.எண்.173/2024, BNS பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா கடந்த 10.08.2024ம் தேதி பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தனபால், பெருமாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட 92 செ.மீ. நீளமுள்ள கடப்பாரை கம்பி மற்றும் உடைந்த நிலையில் இருந்த POCO செல்போன் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் பூபதி, லட்சுமி, பிரியா, பெருமாள், தனபால் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர்

கடந்த 18.08.2024ம் தேதி காவல்நிலையத்தில் ஆஜராகும்படி எதிரிக்கு BNSS சட்டபிரிவு 35ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு மேற்படி அறிவிப்பின் பேரில் எதிரி செந்தில் நிலையத்தில் ஆஜரானதால் அவர்கைது செய்யப்படவில்லை என்றும், 09.10.2024ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சங்கீதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றதாகவும், பின்பு இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன்ராமை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது BNS பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 ன் மூலம் புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ,சா.ஆ.7 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகவும், 92 செ.மீ. நீளமுள்ள கடப்பாரை கம்பி அ.சா.பொ.1 ஆகவும், உடைந்த நிலையில் உள்ள POCO செல்போன் அ.சா.பொ.2 ஆகவும், விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.,சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. மேற்படி அ.சா.3 சாட்சியத்தில் இருந்து புலன் விசாரணை முறையாக நடைபெற்றது என்பதை கூற முடியுமே தவிர எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் பட்டதாக அறுதியிட்டு கூற இயலாது.

**11)** அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிககவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12) முடிவாக,**

எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) of BNS ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான சி.பி எண் 125/2024 ஆக பெறப்பட்டுள்ள ஆ.சா.பொ.1 ஆன 32 செ.மீ. நீளமுள்ள கடப்பாரை கம்பி ஒன்று மற்றும் அ.சா.பொ.2 ஆன உடைந்த நி-லையில் உள்ள POCO செல்போனை மேல் முறையீடு அல்லது மேல் முறையீட்டு காலம் முடிந்தவுடன் அழிக்க BNSS பிரிவு 498 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து –தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ஆம் ஆண்டு மே மாதம் 26–ஆம் நாள் செவ்வாய்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:30:57 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

<u>அரசு தரப்பு சாட்சிகள்–</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | பூபதி | புகார்தாரர் |

| | | | |
|---|---|---|---|
| 2. | அ.சா.2 | லட்சுமி | கண்ணுறு சாட்சி |
| 3. | அ.சா.3 | திருநாவுக்கரசு | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கை–யொப்பம் | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | சமரச மனு | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | புகார் மனு | அ.சா.3 |
| 4. | அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| 5 | அ.சா.ஆ.5 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| 6 | அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| 7 | அ.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.3 |
| 8 | அ.சா.ஆ.8 | படிவம் 91 | அ.சா.3 |
| 9 | அ.சா.ஆ.9 | விபத்து பதிவேட்டுடன் கூடிய கா–யச்சான்றிதழ் | அ.சா.3 |

**<u>அரசுத் தரப்பு சான்று பொருள்–</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.பொ.1 | 92 செ.மீ நீளமுள்ள கடப்பாரை கம்பி | அ.சா.3 |

| | | | |
|---|---|---|---|
| 2 | அ.சா.பொ.2 | உடைந்த நிலையில் உள்ள POCO செல்போன் | அ.சா.3 |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–</u>** இல்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:31:05 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**<u>பின்குறிப்பு–</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.
2. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:31:11 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

<u>CASE SUMMARY</u>

**<u>CC-388/2025, Cr.No. 173/2024</u>**

(CNR.No. TNNM-14-001494-2025)

<u>SENDAMANGALAM POLICE STATION</u>

| **S.No** | **Particulars** | **Purpose** |
|---|---|---|
| i | The period of remand of the accused | - |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 25.11.2025 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 02.03.2026 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 355 of the BNSS | Petition: U/s.359 of BNSS; Crl.M.P.No: M.P.No.2/2026; Result: Dismissed |

<table>
<tr><td>vi</td><td>Date of Examination in-chief and cross-examination of a witness</td><td><table><tr><td>Witness examined as</td><td>Date of Chief Examination</td><td>Date of Cross Examination</td></tr><tr><td>PW1-Boopathi</td><td>20.05.2026</td><td>20.05.2026</td></tr><tr><td>PW2-Lakshmi</td><td>20.05.2026</td><td>20.05.2026</td></tr><tr><td>PW3-Thirunavukarasu</td><td>22.05.2026</td><td>22.05.2026</td></tr></table></td></tr>
<tr><td>vii</td><td>Date of examination of the accused under section 351(1)(b) of the BNSS</td><td>25.05.2026</td></tr>
<tr><td>viii</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be;</td><td>NIL</td></tr>
<tr><td>ix</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td>NIL</td></tr>
</table>

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:31:21 +0530

Judicial Magistrate,
Sendamangalam.